பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 02 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

2. திறன் இந்தியா திட்டத்திற்கு 8 ஆயிரத்து 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. ரயில்வே துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் 5 லட்சத்திற்கும் அதிகமான காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது..

4. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க வகை செய்யும் சட்டத்திருத்த தனிநபர் மசோதா மாநிலங்களவையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

5. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆடவர் கால்பந்து போட்டியில் கேரள அணி தங்கப்பதக்கம் வென்றது

>>>>>><<<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

11 மாவட்டங்களை உள்ளடக்கிய 19 வாக்கு எண்ணிக்கை மையங்களில் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலில் 60 புள்ளி ஐந்து நான்கு சதவீத வாக்குகள் பதிவானது.

வாக்கு எண்ணிக்கையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களும், அதிகாரிகளும் ஈடுபடவுள்ளதாக தில்லி தலைமை தேர்தல் அதிகாரி திரு. **Alice Vaz** தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவை நேர்மையாக நடத்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், துணை ராணுவப்படையினர் உட்பட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தேர்தலில் பிஜேபி 50க்கு மேற்பட்ட தொகுதிகளை கைப்பற்றும் என்று அக்கட்சியின் தில்லி மாநிலச் செயலாளர் திரு. வீரேந்திர சச்தேவா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆனால், வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை ஆம் ஆத்மி கட்சி நிராகரித்துள்ளது.

அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் 4வது முறையாக ஆட்சியமைக்கப்படும் என்று ஆம் ஆத்மி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளர்களிடம் பிஜேபி பேரம் பேசியதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் புகார் தெரிவித்ததை அடுத்து, அதுகுறித்து விசாரிக்க தில்லி துணைநிலை ஆளுநர் திரு. வி.கே.சக்சேனா லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, நேற்று லஞ்ச ஒழிப்புத் துறையினர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் இல்லத்திற்கு சென்றனர்.

அவரது குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருந்தால் காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று லஞ்ச ஒழிப்புத்துறையினர் நோட்டீஸ் அளித்துள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் ஈரோடு கிழக்குத் தொகுதி, உத்தரபிரதேச மாநிலம், மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல்களில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படவுள்ளன.

>>>>>><<<<<<

திறன் இந்தியா திட்டத்திற்கு 8 ஆயிரத்து 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

எந்த துறையில் திறனை மேம்படுத்த வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், திறமையான பணியாளர்களை உருவாக்குவதற்கு தரமான பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகள் நீடிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

இந்த நீட்டிப்பு காரணமாக அந்த ஆணையத்திற்கு சுமார் 51 கோடி ரூபாய் வழங்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ரயில்வே துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் 5 லட்சத்திற்கும் அதிகமான காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

மாநிலங்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், 2020ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை 2 கோடியே 37 லட்சத்திற்கும் அதிகமாக தேர்வர்களை உள்ளடக்கிய இரண்டு தேர்வுகள் நடத்தப்பட்டதாக கூறினார்.

இந்த தேர்வுகளின் அடிப்படையில் ரயில்வேயில் 13 லட்சத்து 581 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும், தேர்வுகள் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்றதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க வகை செய்யும் சட்டத்திருத்த தனிநபர் மசோதா மாநிலங்களவையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் டாக்டர் பௌசியா கான் அறிமுகம் செய்த இந்த மசோதா, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் 2011ஆம் ஆண்டு சட்டத்தை திருத்த வகை செய்கிறது.

இந்த மசோதாவை அறிமுகம் செய்து வைத்து பேசிய அவர், சிறார்களிடம் போதைப் பொருட்கள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் மூலம் சுரண்டல் போக்கு அதிகரித்து வருவதால், பலவிதமான அழுத்தங்களை அவர்கள் எதிர்கொள்வதாக கூறினார்.

2017ஆம் ஆண்டு முதல் ஆறு ஆண்டுகளில் போக்ஸோ வழக்குகள் 94 புள்ளி நான்கு ஏழு சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அதிகரித்துள்ளது என்றும், எனவே பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தி சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்த மசோதா நோக்கமாக கொண்டுள்ளதாகவும் டாக்டர் பௌசியா கான் கூறினார்.

>>>>>><<<<<<

திரிபுரா மாநிலத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. மாணிக் சாஹா நேற்று தொடங்கி வைத்தார்.

அகர்தலாவில் உள்ள தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் இதனை தொடங்கி வைத்து பேசிய அவர், இந்த பயிற்சி திட்டத்தின் கீழ், பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 80 ஆயிரம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும் என்று கூறினார்.

மாநிலத்தில் உள்ள தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம், 983 பள்ளிகளைச் சேர்ந்த 70 ஆயிரம் மாணவிகளுக்கு தொழில் வழிகாட்டுதல் திட்டம், 7 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில மொழித்திறன் மற்றும் வேலைவாய்ப்பு தொழில்முனைவோர் திட்டம் உட்பட பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. மாணிக் சாஹா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்றும் இன்று அதிகாலையும் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடினர்.

மாவட்ட நிர்வாகம் செய்துள்ள ஏற்பாடுகளால் எந்தவித சிரமமும் இல்லாமல் நீராடியதாக பக்தர்கள் தெரிவித்தனர்.

திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் நெரிசல் இன்றி நீராட காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர் தொடந்து தீவிரமாக கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மகா கும்பமேளாவில் மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து துறையின் திட்டங்களை விளக்கும் கண்காட்சி நேற்று தொடங்கியது.

இதில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரி கிராமம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்த கிராமத்தில் பள்ளி, அங்கன்வாடி மையம் உள்ளிட்ட வசதிகளுடன் நிரந்தர வீடுகள் இடம்பெற்றுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு விவரங்களும் பார்வையாளர்களுக்கு விளக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

**>>>>>><<<<<<**

ஜம்மு காஷ்மீர் மாநில பட்டு வளர்ப்புத்துறையின் சார்பில், உதம்பூர் மாவட்டத்தில் இன்று விவசாயிகளுக்கான திருவிழா நடைபெறவுள்ளது.

மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ப்புத்துறையின் நிபுணர்கள் இதில் பங்கேற்று விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பின் முக்கியத்துவத்தை விளக்கவுள்ளனர்.

மேலும், இத்துறையில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து, பட்டுப்புழு வளர்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருவிழாவை ஒட்டி, கண்காட்சி, நேரடி செயல் விளக்கங்கள் மற்றும் பல்வேறு பட்டுப்புழுக்களை காட்சிப்படுத்துதல் உள்ளிட்டவற்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில், சிறந்த பட்டுப்புழு வளர்ப்பாளர்களை பாராட்டி பரிசுகளும் வழங்கப்படவுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை ஐஐடியில் கவின் கலை மற்றும் கலாச்சாரப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் திரு. காமகோடி தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - காமகோடி 48 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இந்தியாவில் எந்தவித ஆவணங்களும் இல்லாமல் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 4 பெண்கள் உட்பட ஏழு பேரை மும்பையில் நேற்று காவல்துறையினர் கைது செய்தனர்.

மகாராஷ்ட்ராவின் செம்பூர் மற்றும் மஹூல் பகுதிகளில் இவர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக வசித்து வந்ததாக காவல்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்கள் பங்களாதேஷ் நாட்டிலிருந்து எந்தவித ஆவணமும் இல்லாமல் இந்தியாவிற்கு வந்ததாக அவர்கள் தெரிவித்ததாக காவல்துறையினர் கூறினர்.

>>>>>><<<<<<

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆடவர் கால்பந்து போட்டியில் கேரள அணி, உத்ராகண்ட் அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வென்று, தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் டென்னிஸ் குழுப் பிரிவில், தமிழகம் தங்கப்பதக்கம் வென்றது.

இறுதிச் சுற்றில் தமிழகத்தின் அபினவ் சஞ்சீவ், மனீஷ் சுரேஷ்குமார், நிக்கி புனாச்சா உள்ளிட்டோர் அடங்கிய குழு 2-0 என்ற கணக்கில் கர்நாடக அணியை வென்றது.

மகளிர் குழுப் பிரிவு அரையிறுதியில் தமிழ்நாடு, மகாராஷ்ட்ராவிடம் தோற்றதால், வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் மணிப்பூரும், மகளிர் பிரிவில் அஸ்ஸாமும் தங்கப்பதக்கம் வென்றன.

ஆடவர் குத்துச்சண்டை போட்டியில் சர்வீசஸ் அணி 51, 57 மற்றும் 71 கிலோ பிரிவுகளில் தங்கப்பதக்கம் வென்றது.

இந்நிலையில் பதக்கப்பட்டியலில் சர்வீசஸ் அணி 38 தங்கம், 13 வெள்ளி, 13 வெண்கலம் என 64 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

கர்நாடகா 30 தங்கம், 12 வெள்ளி, 15 வெண்கலம் என 57 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

தமிழ்நாடு 13 தங்கம், 17 வெள்ளி, 19 வெண்கலப்பதக்கம் என 49 பதக்கங்களுடன் ஆறாவது இடத்தில் நீடிக்கிறது.

>>>>>><<<<<<

9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை சீனாவின் **Harbin** நகரில் அதிபர் **Xii Jinping** நேற்று தொடங்கி வைத்தார்.

வரும் 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 34 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 59 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**>>>>>>END<<<<<<**